இந்து தமிழ்

ஜிப்மர் வளாக விலங்கு இல்லத்தில் ஆய்வு

அனைத்து உயிரினங்கள் மீதும் கருணை காட்டுவது அவசியம்

மத்திய அமைச்சர் எஸ்.பி.சிங் பாகல் கருத்து

புதுச்சேரி

புதுச்சேரி அரசு சார்பில் நேற்று நடைபெற்ற மீன்வளத்துறை விழாவில் பங்கேற்ற பின்னர், ஜிப்மரில் நடைமுறைப்படுத்தப் படும் திட்டங்கள் குறித்து மத் திய இணையமைச்சர் எஸ்.பி. சிங் பாகல் ஆய்வு நடத்தினார். மேலும், ஜிப்மர் வளாகத்திற்குள் அமைந்துள்ள மத்திய விலங்கு இல்ல வசதியையும் அவர் பார்வையிட்டார்.

ஜிப்மரில் அமைச்சர் பேசியது: மனித உயிர்களைப் பாதுகாப் பதிலும், துன்பங்களைத் தணிப் பதிலும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆற்றி வரும் அர்ப்பணிப்பு மிக்க சேவைகள் பாராட்டுக்குரியது. மேலும், சுகாதாரப் பராமரிப்பின் இன்றியமையாத அடித்தளமாக இருப்பது கருணை. அந்த உணர்வு மனிதர்களைத் தாண்டி அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கியதாக விரிவடைய வேண்டும். குறிப்பாக விலங்குகள் மற்றும் பிற உயிரினங்களின் நலன் மற்றும் பாதுகாப்பின் மீது நமக்கு அதிக கருணை உணர்வு தேவை. உண்மையான கருணை அனைவரையும் உள்ளடக்கியத் தன்மை கொண்ட ஒரு சமூகம் அமைவது அவசியம் என்றார்.

ஜிப்மரின் செயல்பாடுகள் குறித்து இயக்குநர் டாக்டர் வீர்சிங் நெகி அமைச்சருக்கு விளக்கமளித்தார். ஜிப்மரின் ஆராய்ச்சி, புத்தாக்கம், தொழில் முனைவு மற்றும் மாற்றுமுக ஆராய்ச்சி முன்னெடுப்புகள் குறிப்பாக மத்திய விலங்கு இல்லம் உள்ளிட்ட ஆராய்ச்சி வசதிகள் குறித்து ஜிப்மர் டீன் (ஆராய்ச்சி) டாக்டர் காதம்பரி விளக்கமளித்தார். மாநிலங்களை உறுப்பினர் செல்வகணபதி, ஜிப்மர் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

தினமணி

அனைத்து உயிரினங்கள் மீதும் கருணை காட்ட வேண்டும்

ஜிப்மரில் மத்திய அமைச்சர்

புதுச்சேரி ஜிப்மரில் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்ட மத்திய இணையமைச்சர் எஸ்.பி. சிங் பாகல். உடன் சு.செல்வகணபதி எம்.பி. ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நெகி உள்ளிட்டோர்.

புதுச்சேரி, செப்.1: அனைத்து உயிரினங்கள் மீதும் கருணை காட்ட வேண்டும் என்று ஜிப்மரில் மத்திய மீன்வளம், கால்நடைத் துறை இணையமைச்சர் எஸ்.பி. சிங் பாகல் கூறினார்.

புதுச்சேரி அரசு சார்பில் நடைபெற்ற விழாவில் செவ்வாய்க் கிழமை பங்கேற்ற பின்னர் ஜிப்மரில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து மத்திய இணையமைச்சர் எஸ்.பி. சிங் பாகல் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது:

மனித உயிர்களைப் பாதுகாப்பதிலும், துன்பங்களைத் தணிப்பதி லும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆற்றி வரும் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளைப் பாராட்டுகிறேன். மேலும், சுகா தாரப் பராமரிப்பின் இன்றியமையாத அடித்தளமாக இருப்பது கருணை. அந்த உணர்வு மனிதர்களைத் தாண்டி அனைத்து உயிரி னங்களையும் உள்ளடக்கியதாக விரிவடைய வேண்டும்.

குறிப்பாக விலங்குகள் மற்றும் பிற உயிரினங்களின் நலன் மற்றும் பாதுகாப்பின் மீதும் அதிக கருணை உணர்வு தேவை. உண்மையான கருணை அனைவரையும் உள்ளடக்கிய தன்மை கொண்ட ஒரு சமூ கம், ஒவ்வொரு வகை உயிரினத்தின் மீதான பொறுப்பை அங்கீகரிக்க வேண்டும் என்றார் அவர்.

ஜிப்மர் வளாகத்துக்குள் அமைந்துள்ள மத்திய விலங்கு இல்ல வசதியையும் அவர் பார்வையிட்டார். ஜிப்மரின் செயல்பாடுகள் குறித்து இயக்குநர் டாக்டர் வீர்சிங் நெகி விளக்கமளித்தார். ஜிப்ம ரின் ஆராய்ச்சி, புத்தாக்கம், தொழில் முனைவு மற்றும் மாற்றுமுக ஆராய்ச்சி முன்னெடுப்புகள் குறிப்பாக மத்திய விலங்கு இல்லம் உள் ளிட்ட ஆராய்ச்சி வசதிகள் குறித்து ஜிப்மர் டீன் (ஆராய்ச்சி) டாக் டர் டி. காதம்பரி விளக்கமளித்தார். இந்த ஆய்வின்போது, சு.செல் வகணபதி எம்.பி., ஜிப்மர் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Government of India
Press Information Bureau
International Year of Cooperatives 2025
Cooperatives Build a Better World

Union Minister Prof. S. P. Singh Baghel Visits JIPMER; Emphasizes Compassion and Ethical Research

Posted On: 01 SEP 2026 7:18PM by PIB Chennai

Union Minister of State for Fisheries, Animal Husbandry, Dairying, and Panchayati Raj, Prof. S. P. Singh Baghel, visited the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER) today. Member of Parliament (Rajya Sabha) Shri S. Selvaganabathy was also present on the occasion.

Dr. Vir Singh Negi, Director, JIPMER, presented an overview of the institute's academic achievements, healthcare services, and major infrastructure. Additionally, Dr. D. Kadambari, Dean (Research), briefed the Minister on JIPMER's translational research, innovation, and Central Animal House facilities. During his interaction with senior faculty, Prof. Baghel commended the healthcare professionals for their dedication and emphasized that compassion must form the core of medical practice, extending empathy and ethical care toward all living beings, including animals.

As part of the itinerary, the Minister toured the Central Animal House Facility at CRIE to inspect its role in supporting biomedical research. The visit highlighted JIPMER's integrated ecosystem combining patient care, advanced medical education, and ethical scientific innovation in alignment with national priorities.

Link: https://www.pib.gov.in/PressReleaseDetail.aspx?PRID=2305674&reg=6&lang=1

Government of India
Press Information Bureau
International Year of Cooperatives 2025
Cooperatives Build a Better World

மத்திய இணையமைச்சர் திரு எஸ் பி சிங் பாகேல் ஜிப்மர் நிறுவனத்தைப் பார்வையிட்டார் - அறநெறி சார்ந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்

Posted On: 01 SEP 2026 7:18PM by PIB Chennai

மத்திய மீன்வளம், கால்நடை வளர்ப்பு, பால்வளம், பஞ்சாயத்து ராஜ் துறை இணையமைச்சர் திரு எஸ் பி சிங் பாகேல், இன்று (01.09.2026) புதுச்சேரியில் உள்ள ஜவஹர்லால் முதுநிலை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி நிறுவனமான ஜிப்மர் நிறுவனத்தைப் பார்வையிட்டார். அப்போது நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு எஸ் செல்வகணபதியும் உடனிருந்தார்.

ஜிப்மரின் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, அந்நிறுவனத்தின் கல்விசார் சாதனைகள், சுகாதார சேவைகள், முக்கிய உள்கட்டமைப்புகள் குறித்து அமைச்சருக்கு எடுத்துரைத்தார். துறைத் தலைவர் டாக்டர் டி காதம்பரி, ஜிப்மரின் பயன்பாட்டு ஆராய்ச்சி, புத்தாக்கம் குறித்து அமைச்சருக்கு விளக்கினார். மூத்த பேராசிரியர்களுடனான தனது கலந்துரையாடலின் போது, இணையமைச்சர் திரு பாகேல் சுகாதார நிபுணர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டினார். மேலும், அனைத்து உயிரினங்களுக்கும் பரிவு, அறநெறி சார்ந்த

பராமரிப்பை வழங்கும், கருணையே மருத்துவப் பயிற்சியின் மையமாக அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அறநெறி சார்ந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

பயணத்தின் ஒரு பகுதியாக, மத்திய விலங்குகள் இல்ல வசதியைப் பார்வையிட்டார். அமைச்சரின் இந்தப் பயணமானது, தேசிய முன்னுரிமைகளுக்கு இணங்க, நோயாளிகள் பராமரிப்பு, மேம்பட்ட மருத்துவக் கல்வி, நெறிமுறை சார்ந்த அறிவியல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஜிப்மரின் ஒருங்கிணைந்த சேவைகளை எடுத்துக்காட்டியது.

Link: https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2305775&reg=6&lang=1

மாலை பூமி
மக்கள் நாளிதழ்
MAALAI BOOMI DAILY Evening

மத்திய இணை அமைச்சர் பேராசிரியர் எஸ். பி. சிங் பாகேல் ஜிப்மருக்கு வருகை நிறுவன செயல்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் விலங்கு ஆராய்ச்சி வசதிகள் குறித்து ஆய்வு

புதுச்சேரி, செப்.1–

மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளத் துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மத்திய இணை அமைச்சர் பேராசிரியர் எஸ். பி. சிங் பாகேல் அவர்கள் ஜிப்மருக்கு 1 செப்டம்பர் 2026 அன்று வருகை தந்தார்.

வருகையின் போது, அமைச்சருக்கு. ஜிப்மரின் மருத்துவக் கல்வி, சுகாதார சேவைகள், நிறுவன சாதனைகள் மற்றும் முக்கிய முன்னெடுப்புகள் குறித்து ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி விரிவான விளக்கவுரையை வழங்கினார்.

தொடர்ந்து, ஜிப்மரின் ஆராய்ச்சி, புத்தாக்கம், தொழில்முனைவு மற்றும் மாற்றுமுக (Translational) ஆராய்ச்சி முன்னெடுப்புகள், குறிப்பாக மத்திய விலங்கு இல்லம் (Central Animal House) உள்ளிட்ட ஆராய்ச்சி வசதிகள் குறித்து ஜிப்மர் டீன் (ஆராய்ச்சி) டாக்டர் டி. காதம்பரி விளக்கமளித்தார். உயர்தர உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி, புத்தாக்கம், தொழில்முனைவு மற்றும் கூட்டு ஆராய்ச்சியை ஊக்குவிப்பதில் ஜிப்மர் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து விளக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஜிப்மரின் மூத்த அதிகாரி களுடனான கலந்துரையாடலில் அமைச்சர் பங்கேற்றார். இக்கலந்துரையாடலின்போது, நிறுவனத்தின் பல்வேறு முன்னெடுப்புகள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்து கலந்துரை யாடப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர், மருத்துவத் தொழிலுடன் தொடர்புடைய உன்னதம் மற்றும் மகத்தான பொறுப்பு குறித்துப் பேசினார். மேலும், மனித உயிர்களைப் பாதுகாப்பதிலும், துன்பங்களைத் தணிப்பதிலும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் ஆற்றிவரும் அர்ப்பணிப்புமிக்க சேவைகளைப் பாராட்டினார். சுகாதாரப் பராமரிப்பின் இன்றியமையாத அடித்தளமாகக் கருணையின் முக்கியத்துவத்தை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். மேலும், அக்கறையின் உணர்வு மனிதர்களைத் தாண்டி அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்கியதாக விரிவடைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அமைச்சர், குறிப்பாக விலங்குகள் மற்றும் பிற உயிரினங்களின் நலன் மற்றும் பாதுகாப்பின் மீது அதிக உணர்திறன் தேவை என்பதை எடுத்துரைத்தார். உண்மையான கருணையும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையும் கொண்ட ஒரு சமூகம், ஒவ்வொரு வகை உயிரினத்தின் மீதான தனது பொறுப்பை அங்கீகரிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அறிவியல் முன்னேற்றமும் வளர்ச்சியும் அறநெறி விழுமியங்கள், பச்சாதாபம் மற்றும் அனைத்து உயிரினங்கள் மீதான மரியாதை ஆகியவற்றால் வழிநடத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். அவற்றின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதில் அதிக விழிப்புணர்வு மற்றும் கூட்டுப் பொறுப்புணர்வு தேவை என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

வருகையின் ஒரு பகுதியாக அமைச்சர் ஜிப்மர் வளாகத்திற்குள் அமைந்துள்ள மத்திய விலங்கு இல்ல வசதியை பார்வையிட்டார். இவ்வசதியின் செயல்பாடுகள், உயிரியல் மருத்துவம் மற்றும் மாற்றுமுக ஆராய்ச்சிகளுக்கு வழங்கும் ஆதரவு, அத்துடன் அறிவியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியை முன்னெடுப்பதில் விலங்கு ஆராய்ச்சி வசதிகளின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சரின் இந்த வருகை, நோயாளிகள் நலச் சேவை, மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் நவீன அறிவியல் வசதிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்த ஜிப்மரின் சிறப்பான செயல்பாடுகளை வெளிப்படுத்தும் முக்கிய வாய்ப்பாக அமைந்தது. மேலும், நாட்டின் சுகாதாரம், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறைகளின் முன்னுரிமைகளுக்கு தொடர்ந்து பங்களிப்பதற்கான ஜிப்மரின் உறுதிப்பாட்டை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.

இந்த நிகழ்வில் மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி கலந்து கொண்டு சிறப்பித்தார்.